விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 38 ஆடி: 9 முஹர்ரம் பிறை: 2 இதழ்: 156

யாழ்ப்பாணம் புதன்கிழமை 25-07-1990

## காட்டு வழியாக வந்த 800 தமிழ் அகதிகள்!

(தென்மராட்சி)

திருமலைதம்பலாகாமத்தைச் சேர்ந்த 800 தமிழர்களை விடுதலைப்புலிகள் பாதுகாப்பாக காட்டுப்பகுதிகள் ஊடாக தென்மராட்சிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பட்டினியோடு காட்டுப் பாதை வழியாக பத்து நாட்கள் நடந்து வந்த 800 தமிழ் அகதிகளும் தற்போது இங்குள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

15 வயதிற்கும், 50 வயதிற்குமிடைப் பட்டோரை

(4-ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கி கவச வாகனம் சேதம்!

(யாழ்ப்பாணம்)

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரின் கவசவாகனம் ஒன்று புலிகளின் கண்ணிவெடி

(4-ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் கடும் சண்டை!

# 'வன்னி'யைகைப்பற்ற முயற்சி!

(யாழ்ப்பாணம்)

**வன்னி மாவட்டத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் அரச படையினர் இம் மாவட்டத்தின் எல்லைப்புறமான கிளிநொச்சி மாவட்டத்தின் மீது தீவிர தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.**

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, பொம்மர், ஹெலிகளில் இருந்து வானத் தாக்குதல்களும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

ஆகாயத் தாக்குதலின் உதவியுடன் பரந்தனில் இருந்து நகர முற்படும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளுடன் இணைந்து மகளிர் பிரிவினரும் கடுமையான தாக்குதல் நடத்திவருவதனல் இராணுவத்தினரால் நகர முடியாது இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயிரக்கணக்கான படையினர் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந் நடவடிக்கைகளின் போது இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வல்லை வெளியில் பயணிகள் மீது ஹெலி தினமும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி வல்லைவெளியில் அடிக்கடி ஹெலிகொப்டர் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்படுவதால் யாழ் - பருத்தித்துறைப் போக்குவரத்துத் துண்டிக்கப் படும்நிலை தோன்றியுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கப்பல் அனுப்பி உதவுமாறு இந்திய அரசுக்கு கோரிக்கை

(சென்னை)

''இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் படையினரின் தாக்குதலினுல் தவிக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவர இந்திய அரசு உடன் கப்பல் அனுப்பிவைக்க வேண்டும்'':

திராவிடர் கழக இளைஞர் பிரிவு நேற்று மத்திய மாநில அரசுகளுக்குஇவ்வாறுவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சென்னையில் நடைபெற்ற திராவிடர்கழக மாநாட்டில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டிற்கு முன்னர் ஈழத் தமிழருக்கு ஆதரவாக கழகத் தொண்டர்களின் ஊர்வலம் ஒன்றும் இடம்பெற்றது.

## ஆடிப் பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினுதீவு நாகபூஷணி அம்பாள் ஆடிப் பூரத் திருவிழா இன்று நடைபெறுகிறது.

காலை 10 மணிக்கு அம்பாளுக்கு நவோத்ர சகஸ்ர மகா (1008 சங்காபிஷேகம்) சங்காபிஷேகம், பூரகர்மா, தீபாராதனை ஆகியனவும் ஆடிப் பூரத் திருவிழாச் சபையினரால் நிர்மாணிக்கப்பட்ட தாமரைப்பூ வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் நடைபெறும். (உள்ளே சிறப்பு மலர்.)

## "பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் இருக்கவேண்டியவர் செல்லக்கிளி"

(யாழ்ப்பாணம்)

''தலைவர் பிரபாகரனுக்கு அடுத்தநிலையில் இருக்கவேண்டியவர் லெப்டினன்ட் செல்லக்கிளி'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

கல்வியங்காடுசந்தைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செல்லக்கிளியின் ஏழாவது நினைவுதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்,

திரு. யோகி மேலும் கூறியதாவது: ''திருநெல்வேலியில ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக கெரில்லா தலைவன் செல்லக்கிளி மேற்கொண்ட தாக்குதல் சிறிலங்கா படையினருக்கு விழுந்த முதலாவது அடியாகும்.

[4-ம் பக்கம் பார்க்க]

## மாங்குளம் இராணுவத்தினரின் மோட்டரினுல் ஆனையிறவு முகாம் மீது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் இராணுவத்தினரிடம் இருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட 82 எம்எம் மோட்டார் மூலம் ஆனையிறவு நோக்கித் தாக்குதல் நடத்தப்படுகிறது.

முகாமிற்கு அண்மையில் பொருத்தப்பட்டிருக்கும் இம் மோட்டரினுல் முகாமை நோக்கி விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. (107)

## யாழ்.நகரில் இன்று மாணவர் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

'தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம்' கல்வி தொடர்பான அடக்கு முறைகளைக் கண்டித்து மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து இன்று 25தி தேதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகும்.

சகல உயர் வகுப்பு மாணவர்களையும், தனியார் பரீட்சார்த்திகளையும் சீருடையில் தவருது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## தாயக மீட்பு நிதி

தாயக மீட்பு நிதிக்கென பவுண் வழங்க முடியாத பொதுமக்கள் அதற்குப் பதிலாக ரூபா 10 ஆயிரம் வழங்கலாம். தாயக மீட்பு நிதிக்கென பவுண் சேகரிக்கவரும் எமது குழுவினர் பவுண் இல்லாதவர்களிடம் அதற்குப்பதிலாக 10ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

## காயமடைந்த போராளிகள், பொதுமக்களை 'தென்றல்'குழு'பராமரிக்கிறது

(மானிப்பாய்)

மானிப்பாய் ஆஸ்பத்திரியிலுள்ள யாழ். போதனு வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காயமடைந்தவர்களை கடந்த இருவாரங்களாக தினமும் ''தென்றல்'' தொண்டர்கள் இரவில் பராமரித்து வருவதாக தென்றல் குழுத் தலைவர் செல்வன் கா. யோ. கிரிதரன் தெரிவித்தார்.

தினமும் 'தென்றல்'' தொண்டர்கள் குழு காயமடைந்த போராளிகள், பொதுமக்களுக்குஇரவில்தங்கியிருந்து அவர்களுக்கு தேவையான உதவிகளைச்செய்துவருவதாகவும், அவர்களுடன் அன்புடன்பேசி, பெற்றோர், சகோதரர் போல் ஆதரவாகநடந்து

(4ம் பக்கம் பார்க்க)

## தேடுதல்வேட்டையில்கைதான 72 தமிழ் இளைஞர் படுகொலை!

(திருமலை)

கிழக்கு மாகாண[illegible] படையினர் நேற்று[illegible] நடாத்திய தேடுதல் வேட்டையின் போது 72 சந்தேக நபர்கள் கொல்லப்பட்[illegible]களை வாஞ்சிக்குடி, கொக்கட்டிச் சோலை ஆகிய இடங்களில் பலத்த தேடுதல் வேட்டையின்போது கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களே சந்தேகத்தின்பேரில் இவ்வாறு

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேதமடைந்த வீட்டின் மீது ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

கடந்த வாரம் அவ்ரோ விமானக் குண்டுவீச்சினுல் சேதமடைந்த யாழ். பாங்ஷால் வீதியிலுள்ள சுரேஷ் என்பவரின் வீட்டின்மீது மீண்டும் ஷெல் வீழ்ந்ததால் அவ்வீடு முற்ருகச் சேதமடைந்துள்ளது.

## இராசி பலன்

**25-07-90**
**புதன்கிழமை**

திருதியைகாலை 6-17 வரை, பூரம் காலை 5-53 வரை' அமிர்தயோகம், இராகுகாலம் பகல் 12-02 முதல் 1-32 வரை, ஆடிப்பூரம், நாக சதுர்த்தி விரதம், நல்ல நேரம் 4-32 முதல் 6-32 வரை.

மேடம்: மனப்பயம், வீண் யோசனை, தொழில்பாதிப்பு.

இடபம்: எதிலும் விரக்தி, பணமுடை, கருத்துவேறுபாடு.

மிதுனம்; திரவியலாபம், தொழில் சிறப்பு, தாய்வழி உதவி,

கடகம்: ஏமாற்றம், காரிய தடை, குடும்ப விவகாரம்.

சிங்கம்: மனநிறைவு, காரியவெற்றி, குடும்ப மகிழ்ச்சி.

கன்னி: எதரிகள் பகை, குறைகேட்டல், பணக்கவலை.

துலாம்: சென்ற இடத்தில் சிறப்பு, உறவினர் வருகை, தொழில் லாபம்.

விருச்சிகம்: குடும்பத்தில் சுப நிகழ்ச்சி, பொருள் வரவு, நினைத்தது கைகூடும்.

தனுசு: வைத்திய செலவு, மனச்சுமை, சகோதர உதவி.

மகரம்: வீண்கவலை, குடும்ப கலகம், சென்ற இடத்தில் செலவு.

கும்பம்: தொழில்பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி. புதிய உறவு, நம்பிக்கை.

மீனம்: வீண்கலவரம், கோபமிகுதி, குடும்பபிரிவு, அதிகபிரயாசம்;

-ஜோஸ்யர்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தசாமி பிரேம்சந்திரகுமார்**
(Msc பொறியியலாளர்)

ஆக்கம்:- 11-11-1949

அழிவு:- 25-07-1983

பாதகரின் படுகொலைக்குப் பலியாகி ஆண்டுஏழு கழிந்திடினும் நின் தோற்றம் எம் நெஞ்சைவிட்டகலவில்லை

ம்பிரிவால் துயருறும்:
**அன்புப் பெற்ருேர்**

122, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4105)

## 'பவல்' கவச வாகனம் யாழ். வீதிவலம்

(யாழ்ப்பாணம்)

மன்ஞர் கொண்டாச்சி இராணுவ முகாமைத்தாக்கி கைப்பற்றிய 'பவல்' கவச வாகனம் நேற்று முன்தினம் யாழ். நகர் வீதிகள் ஊடாக பவனி வந்தது.

பத்து விடுதலைப்புலி வீரர்கள் இவ்வாகனத்தில் அமர்ந்து பவனி வந்தபோது மக்கள் வீதியின் இருமரங்கிலும்நின்று தமது கைகளை அசைத்து ஆதரவு தெரிவித்தனர்.

## மாணவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு அதிபர்கள் ஆசிரியர்கள்தான்பொறுப்பு

(நாவற்குழி)

பாடசாலையில் மாணவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு அதிபர்களோ ஆசிரியர்களோ பொறுப்பாக இருக்க மாட்டார்கள் என கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்த கருத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மககள முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு: பாப்பா வன்மையாகக் கண்டித்தார்.

பளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அதிபர் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு. பாப்பா பாடசாலைகளில் மாணவர்களுக்கு நிகழ்கின்ற ஒவ்வொரு சம்பவத்திற்கும் அதிபர்களும், ஆசிரியர்களும் தான் பொறுப்பாகும். ஏன் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளில் பதுங்குகுழிகளை அமைத்து மாணவர்களை பாதுகாக்க முடியாது என்று கேட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இயக்கச்சி, கோவில்வயல் ஆசிரியபகுதிகளில் உள்ள பாடசாலைகளை மூடி ஏனைய பாடசாலைகளை இயங்க வைக்கும் இவ்வேளையில் கிழக்கு மாகாணங்களிலிருந்தும், ஏனைய இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்து இங்கு தஞ்சமடைந்த மாணவர்களது நிலைபற்றி, கல்விபற்றி, தளபாட வசதி பற்றி இதுவரையில் யாராவது சிந்தித்தனரா அதுவே இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானதாகும் என்ருர். (107)

## இப்படியும் நடக்கிறது

யுத்த நெருக்கடியினுல் தமிழ்மக்கள் படும் அவலம் ஒரு புறமென்ருல்; அகதிகளாக இந்தியா புறப்படும் தமிழ் மக்களின் கண்ணீர்க்கதை - சம்பவங்கள் ஒரு நாவலாக இருக்கிறது!

வீட்டை விட்டுப் புறப்படுவதிலிருந்து அக்கரை போய்ச் சேரும்வரை அந்தரங்க வாழ்க்கைதான்!

யுத்த நெருக்கடியினுல் பாதிக்கப்பட்ட சிலர் இந்தியா செல்ல முடிவுசெய்து, படகொன்றை ஏற்பாடு செய்தனர். படகோட்டியிடம் பேரம்பேசப்பட்டபோது, கட்டணமாக இருபத்துநாலாயிரம் ரூபா கோரினுர். பணமும் கைமாறப்பட்டு, புறப்படும் திகதியும் நிச்சயிக்கப் பட்டது.

கடல் பிரயாணம் ஆரம்பமானது. படகிலிருந்த எல்லோர் முகத்திலும் ஒரே சந்தோஷம்.

''அதோ...... இந்தியக்கரை வந்துவிட்டது. இன்னும் சில நேரத்தில் கரையை அடைந்து விடலாம்...'' என்று படகோட்டி கூறியதும்; தமிழக மண்ணில் கால் வைத்த உணர்வு அப் பிரயாணிகளுக்கு ஏற்பட்டது.

கரையும் நெருங்கி விடவே, எல்லோரும் உற்சாகத்துடன் படகிலிருந்து இறங்கி நடந்து கரையை அடைந்தார்கள். படகோட்டிக்கு நன்றியும்கூறி விடைபெற்ருர்கள்.

கள்ளிப்பற்றைகள் ஊடாக நடந்துசென்ற அவர்கள் வழியில் சிலரைச் சந்தித்து, ''இராமேஸ்வரம், மண்டபம் முகாம் தூரமா?'' என்று கேட்டனர்.

''என்ன இராமேஸ்வரமா...? இது விடத்தல் தீவு......'' என்று அவர்கள் பதில்கூறவே 'தமிழகப் பிரயாணகள்' இடியோசை கேட்ட நாகம்போல் அப்படியே அசந்துபோய் விட்டனர்!

இவர்களில் சிலர் உடனடியாகவே படகோட்டியைத் தேடி ஓடினர். ஆனுல் அவர் இருந்தால்தானே! தலைமறைவாகி விட்டார்! நமது 'தமிழகப் பயணிகள்' கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றனர்! [தகவல் நமது மானிப்பாய் நிருபர்]

'ஊடுருவி'

## அரசாங்கம்தமிழரின்சொத்துக்களைஅழித்து இனஅழிப்பு நடத்திவருகிறது

### - கவிஞர் இரத்தினதுரை குற்றச்சாட்டு

(பண்டத்தரிப்பு)

''தமிழ் மக்களையும் அவர்களின்சொத்துக்களையும்அழித்து அரசாங்கம்இனஒழிப்பு நடத்தி வருகிறது'' என்று பண்டத்தரிப்பில் நேற்று நடைபெற்ற தமிழீழ மீட்பு நிதி கடன் பத்திரம் தகவல் படிவம் வழங்கும் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி கலாச்சார பிரிவு பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு சிற்றூர் அவைத் தலைவர் திரு. ச.செல்வரத்தினம் தலைமையில் ஜசிந்தா ரே. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திரு. புதுவை இரத்தினதுரை தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது: ''அரசாங்கம் தேசிய பாதுகாப்பு நிதி என்று பெரும் தொகையான பணத்தை சேகரித்து வருகின்றது, சிங்கள மக்கள் இந்த நிதிக்கு வாரி வழங்குகின்ருர்கள். இராணுவத்தில் சேர்ந்து போராட பெருந்தொகையான சிங்கள இளைஞர்கள் முன்வந்துள்ளார்கள்- ஆனுல் எமது நிலை என்ன? யாழ் மாவட்டத்தை பொறுத்தவரையில் மக்கள் பங்களிப்பு ஐந்து வீதமாக கவே இருக்கிறது. 95வீதமானவர்கள் எவ்வித பங்களிப்பும் வழங்கவில்லை. கிளிநொச்சி வன்னிமா வட்டம், மட்டக்களப்பு, திருமலை, மன்னுர் மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான இளைஞர்களும் யுவதிகளும் இயக்கத்தில் இணைந்துபோராடி வருகின்ருர்கள்.

எமது இயக்கமும் தமிழ் மக்களும் தண்ணீரும் மீனும் போன்றவர்கள். தண்ணீர் இன்றி மீன் வாழமுடியாது. எமது இயக்கம் இராணுவ ரீதியில் பலம்மிக்கதாக செயற்படுவதற்கும், அரச படைகளை எதிர்த்துநின்று போராடுவதற்கும் மேலும் இளைஞர்களும் யுவதிகளும் இணைய வேண்டும். அத்துடன் நிதியும் போதியளவு சேகரிக்க வேண்டும். இதற்கு உங்கள் பங்களிப்பு மிகவும் அவசியம்.

சண்டிலிப்பாய் வட்ட அவைத் தலைவர் திரு. அ. சவரிப்பிள்ளை உரையாற்றுகையில் எமது தமிழ் மண்ணைக்காக்க நாம் தீரமுடன் போராடவேண்டும் என்பதை இன்றைய எமது இளைஞர்களும் யுவதிகளும் நன்குணர்ந்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதென்றும், இவர்களை பெற்ருேர்கள்தடுக்க முற்படக் கூடாது என்றும் குறிப்பிட்டார். திரு. ஆ. யேசுதாசனும் உரையாற்றினுர்.

## அகதிகளுக்கு உணவுப் பொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். சி. நிறுவனம் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு அரிசி, மரக்கறி, ஆகிய உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது. மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, நவாலி மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ள திருகோணமலையைச் சேர்ந்த அகதிகள் குடும்பங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த உணவுப் பொருள்கள் நேரடியாக கொண்டு சென்று வழங்கப் பட்டுள்ளதாக பண்டத்தரிப்பு வை. எம். சி ஏ. உபதலைவர் திரு. எஸ். இரத்தினவேல் தெரிவித்தார். (72)

## யாழ். நகரில் மயிரிழையில் தப்பிய அகதிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகர் மீது நேற்றுமுன் தினம் அதிகாலை மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் மயிரிழையில் உயிர்தப்பினுர்கள்.

அவ்ரோ விமானம் [illegible] தில் வட்டமிட்டுக் குண்டுகளைப் போடும்போது இரு பொம்மர் விமானங்கள் மண்டைதீவுப் பகுதிகளில் குண்டு மாரி பொழிந்தன.

'அவ்ரோ' விமானத்திலிருந்து போடப்பட்ட குண்டு ஒன்று சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு 25 யார் தூரத்தில் விழுந்ததினுல் அக்கல்லூரியில் இருந்த பெரும் தொகையான அகதிகள் மயிரிழையில் உயிர் தப்பினுர்கள்.

இதேவேளை இக் கல்லூரியின் முன்பாக நடைபெற்று வரும் தற்காலிக சந்தையில் பெரும் திரளாக குழுமியிருந்த மக்கள் வானத்திலிருந்து குண்டு தம்மை நோக்கி வருவதை அவதானித்து நாலா பக்கமும் ஓடியதினுல் இடிபாடுகளில் அகப்பட்டு பலர் படுகாயமடைந்தனர். சந்தையிலிருந்த பொருள்கள் அனைத்தும் வீதிகளில் சிதறிக் காணப் பட்டன.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பலர் இச் சந்தைப் பொருள்களை திருடிச்சென்றதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## தகவல் தாருங்கள்

(யாழ். முத்திரைச் சந்தையிலுள்ள யாழ் இந்துக் கல்லூரி சென். ஜோன் முதலுதவிப் படையின் அகதிகளுக்கான தகவல் மையத்தில் பெறப்பட்ட தகவல் இவை.)

உவர்மலை மகேஸ்வரர் வீதியைச் சேர்ந்த கே. பஞ்சாட்சரத்தை நல்லூர் 3, செம்மணி வீதியைச் சேர்ந்த நா. புவனேந்திரன் தேடுகிருர்.

ஏருவூர் 4ம் குறிச்சியைச் சேர்ந்த கே. புத்திசிகாமணியை நல்லூர் 3, செம்மணி வீதியைச் சேர்ந்த ஐ. தம்பிராசா தேடுகிருர.

ஏருவூர் 4ம் குறிச்சியைச் சேர்ந்த காளி கோவில் வீதி, சண்முகம் பாலாம்பிகையை யாழ்ப் பாணம் 74/1, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த வி.கந்தசாமி தேடுகிருர்.

திருகோணமலை சி. வி. வீதியைச் சேர்ந்த கதிரித்தம்பிகுடும்பத்தினரை தெல்லிப்பழை, குரும்பசிட்டி ரி. செல்லத்துரை, கல்வியங்காடு பிளேகிரவுண்ட் வீதியைச் சேர்ந்த இரட்ணகுமார் தேடுகின்ருர்.

செங்கலடி வந்தாறுமூலையை சேர்ந்த செல்வி சுவர்ணு சுப்பிரமணியத்தை (கிழக்குப் பல்கலைக்கழகம்) யாழ்.சுண்டிக்குளி 7, காட்டுக்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த ரி. சிவசுப்பிரமணியம் தேடுகிருர்.

மட்டக்களப்பு கல்முனையைச் சேர்ந்த வே.ஆனந்தவேலை காங்கேசன் துறை கருகம்பானையைச் சேர்ந்த திருமதி கே. ஆனந்தவேல் தேடுகிருர்.


திருமலை குறுமன்காடு, யூ. சி. குவாட்டர்சைச் சேர்ந்த திருமதி ஆர். இராஜேந்திரம் தேவியை நல்லூர் முடமாவடிசந்தி 449/3, ராமலிங்கம் வீதியைச் சேர்ந்த ரி.ஆனந்தராஜா தேடுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

# ஆடிப்பூர சிறப்புமலர் 25-7-90

## அன்னை நாகபூஷணியை கன்னியாகக் காணும் ஆடிப்பூரத் திருவிழா



''வானுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற் கண்ணிய எல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன்றோ முன்செய் புண்ணியமே''
(அபிராமி-40)

அங்கிங்கெனாதபடி எங்கும்பிரகாசமாய்பார்க்கும்இடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் அன்னைபராசக்தி, அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தினை தன்னகத்தே கொண்டு நயினையில் ஸ்ரீ நாகபூசணியாக வீற்றிருக்கின்றாள். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முற்சிறப்புகளையும் இத்தலம் அனாதிதொட்டு தெய்வீகப் தன்மை வாய்ந்த அதிசயமிக்க மறைக்கமுடியாத பல வரலாற்று உண்மைகளைக் கொண்டது. கோமுகிப் பொய்கை, அமுதசுரபி என்பனவற்றுடன்தொடர்புடைய வரலாற்றுச் சிறப்புமிக்கமணி பல்லவம் எனப் போற்றப்படும் இப்புண்ணிய புனித பூமியிலே ஆண்டுதோறும் மஹோற்சவ காலங்களிலும் விஷேட தினங்களிலும் சாதாரண நாட்களிலும் அலைகடல்தாண்டி அம்பிகையின் அருள்வேண்டிவரும் அடியார்கள்அநேகம். அவளின் அருள் பெற்றுதவர்கள் அநேகம்.

ஆண்டுதோறும் அம்பிகைக்கு நடைபெறும் அலங்கார உற்சவங்கள் பல, அவற்றுள் அம்பிகையை கன்னியாகக் கண்டுகளிப்புற்று எடுக்கும் பெருவிழாவே ஆடிப்பூரவிழாவாகும். ஆடிப்பூரவிழா ஒன்று அம்பிகைக்கு ஏன் கொண்டாடப்படுகின்றது என எண்ணுவாரும் உளர். அம்பிகை குழந்தையாக இருந்து குமரியாகிபருவமடைந்து ருதுவாகி

**சி. நா. மதியாபரணம் ஜே. பி.**
(தலைவர், ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவில்)

யது. ஆடிமாதத்து பூர நட்சத்திர தினத்திலேயாகும். இதனால் தான் ஆடிப்பூரதினத்தினை அம்பிகைக்கு கன்னித் திருநாளாககொண்டாடுகிறார்கள். அகிலாண்டகோடியீன்ற அன்னையாய் அகிலமெல்லாம் காத்தருளும் பராசக்தி கன்னியாகவும் குழந்தையாகவும் அடியார் மனதில் வேண்டியபோது வேண்டியவாறு காட்சிதருகின்றவள். இதனை பிள்ளைத்தமிழ் பாக்களிலும், தாயுமானவர் பாடல்களிலும் அழகாக காணலாம்.

மனிதன் லௌகீகவாழ்வில் நடைபெறும் மங்கல நிகழ்வுகளை கடவுளின் தெய்வீக வாழ்விலும் கண்டு களித்தவன் தமிழன், இது தமிழர் பண்பாடாக அனாதி தொட்டு இருந்து வந்திருக்கிறதென்பதற்குச் சூரசம்மாரம், திருக்கல்யாணம், திருவுலா என்பன பனசான்றுகவுள்ளன. இத்தமிழர் பண்பாட்டின் இன்னுமோர் பிரதிபலிப்பே ஆடிப்பூர விழாவாரும். லௌகீக வாழ்வில் ஒரு கன்னிக்கு ருதுவாகிப் பூப்புப்புனித நீராட்டும்போது நடைபெறும் சடங்குகள் அனைத்தையும், அம்பிகையைக் கன்னியாகக் கண்டு தெய்வீக வாழ்வில் நடாத்திப் பூரிப்பு அடையும் நாளே ஆடிப்பூரத் திருநாளாகும்.

அம்பிகை அருளாட்சிசெய்யும் ஆலயங்கள் சிலவற்றில் இவ்விழா கொண்டாடப்பட்டாலும், நயினையில் இவ்விழா நாகபூஷணிக்கு மிகவும் சிறப்பாகப் பெருவிழாவாகக் கொண்டாடப்படுவது அடியார்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இவ்வாலயத்தின் ஆடிப்பூர விழா நீண்டகாலமாக ஆடிப்பூரத் தினத்திலேமட்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் இவ்விழாவினைச் சமயாசார முறைப்படியும் தமிழர் பண்பாட்டுச் சடங்குகளின் முறைப்படியும் மிகவும் சிறப்பாகச் செய்விக்க வேண்டும் என்ற பெருநோக்கில் இவ்விழாவினைச் சிறப்பாக நடாத்துவதற்கு ஏதுவாக 1987-ம் ஆண்டு ஆடிப்பூர விழாச் சபை, ஒன்று உருவாக்சுப்பட்டது. அம்பிகையின் திருவருளால் உதயமாகிய இச்சபையினரால், அன்று தொட்டு, இன்றுவரை வருடா வருடம் ஆடிப்பூர விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. முதல் ஒன்பது தினங்களுக்கு, லட்சா அர்ச்சனையுடன் கூடிய, விசேட அபிஷேகமும், ஸ்ரீ சக்கர பூசையும் நடைபெற்று, விசேட தீபாராதனைகளும் நடைபெறும். ஆடிப்பூர தினமாகிய பத்தாவது நாளில் லட்சா அர்ச்சனைப் பூர்த்தியும் விசேட அபிஷேக ஆராதனைகளும் மகா சங்காபிஷேகமும் (1008) நடைபெற்று மிக அழகாக ஆடிப்பூர விழா சபையினரால் உருவாக்கப்பட்டிருக்கும், தாமரைப்பூ வாகனத்தில் அம்பாள் வீதி உலா வரும் அலங்கார அற்புதக் காட்சியும் நடைபெறும். இவ் உற்சவம் நடைபெறும் பத்துத் தினங்களும் அம்பிகை அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக புதுப்பொலிவுடன் கன்னியாக வீற்றிருந்து அவள் அருள் நாடிவரும் அன்பர்களுக்கு அருள் பாலித்த வண்ணம் ஆனந்த மூர்த்தமாக வீற்றிருந்து அருட்காட்சியளிப்பாள்.

ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் இவ்விழாவினைக் கண்டு களிப்பது வழக்கம், ஆடிப்பூர தினத்தில் அம்பிகைக்குரிய ருது சாந்தி விழா நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக முடிந்து, அடியார்கள் உளம் பூரிப்படைந்த பின், ருது சாந்தி விழாக்காண வருகை தந்தோர்கள் அனைவருக்கும். அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்தில், அன்னதான சபையினரின் அனுசரணையுடன், ஆடிப்பூரச் சபையினரால் ருது சாந்தி விழாவின் விருந்துபசாரம் வழங்கப்பட்டு ஆடிப்பூர விழாவின் பூர்த்தி கொண்டாடப்படும். அம்பிகையின் அடியார்கள் யாவரும் இவ்விழாவில் கலந்து சிறப்பிப்பார்கள் என நாம் அம்பிகை திருவருளால் எதிர்பார்க்கின்றோம். ஆடிப்பூரச் சபையினரால் இவ் ஆடிப்பூர விழா சிறப்பாக இனிதே நடைபெறுவதற்கு ஆலய அறங்காவலர் சபையினர் தமது பூரண ஒத்துழைப்பையும். ஆதரவையும் என்றும் வழங்கி வருகின்றார்கள். அம்பிகையின் திருவருளால் இவ் விழா தொடர்ந்தும் ஆடிப்பூரச்சபையினரால் சிறப்பாக நடைபெறவேண்டுமென அறங்காவல் சபையின் சார்பில் ஆசீர்வதித்து நிற்கின்றேன்.

இன்று நடைபெறும் இவ் ஆடிப்பூரவிழா சிறப்பாக நடைபெற்று, அன்னையின் அருள் அகிலமெல்லாம் பிரகாசிக்கவேண்டுமென வேண்டி அவளின் திருவருள் தோன்றாத் துணையாக நின்று எல்லோருக்கும் சாந்தியையும் சமாதானத்தையும் தந்து, நல்லனவெல்லாம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கின்றோம்.

இவ்விழா இன்று இனிதே நடைபெறவும், எதிர்காலத்திலும், இவ்வாறே தொடர்ந்து சிறப்பாகவும், உற்சாகத்துடனும், நடைபெறவும், எம் பிராட்டியாகிய அன்னை நாகபூஷணி ஆடிப்பூரச்சபையினருக்கு வல்லமை தர வேண்டும் எனப் பணிந்து ஆடிப்பூரச் சபையினருக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்வதில். அறங்காவல் சபையின் சார்பில் மனநிறைவடைகின்றேன்.

[4-ம் பக்கம் பார்க்க]

### திருவருளைப் பொழிக நாகபூஷணியே!

கருடனொடு பாம்புசுற்றிக் கல்லும்சூழ
கடலலையோம் சக்தியெனக் கீதம்பாட
அருள்பெருகு நயினைநகர் தன்னில்வாழும்
அன்னைபுவ னேஸ்வரியுன் அடிகளேத்த
பெருகிவரும் பிரச்சனைகள் பெயர்ந்துபோக
பெருமையுடன் தமிழரசும் பெற்றுவாழ
திருப்பெருக செங்கமல மீதமர்ந்து
திருவருளைப் பொழிநாக பூஷணியே!

அடியவரின் இருளகற்று மன்னையாக
அலைபாயும் கடலோரம மர்ந்திருந்து
கொடியவரின் கொட்டமதை யடக்கிடவே
கொற்றவையே போர்க்கோலம்
கொள்வாயம்மா
ஆடியதில் அம்பிகைக்கு உகந்தபூரம்
அன்றுருது சாந்தியினைக் காணவென்றே
தேடிவரு மடியவர்தம் குறைகளைந்து
திருவருவளைப் பொழிநாக பூஷணியே!!

நயினை இராகுலம்

**மலர் தொகுப்பு:**
**வே. ச. வி. சபாநாதன்**
ஜே. பி., செயலாளர்,
நயினாதீவு இந்துகலாச்சார அபிவிருத்திச் சபை.

**அன்னையின் ஆடிப்பூரத் திருவிழாக் காண சகலரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.**

ஆடிப்பூரத் திருவிழாச் சபை.

ஆடிப் பூரத் திருவிழா
சிறப்புற அம்பிகையை
இறைஞ்சுகிறோம்.
ஈஸ்வர அம்பாள்
அன் கோ,
158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பிகையின் ஆசி
அனைவருக்கும்
கிடைப்பதாகுக.
'வூட்சன்ஸ்'
M. T. பொன்னம்பலம்
36-41, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி
தாயே
நல்லருள் புரிவாய் அம்மா
நியூ விமாகி
செரமிக்ஸ்
அன் எலக்றிக்கல்ஸ்
மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

அலைகடல் மத்தியில்
அருள்மழை பொழியும்
அம்பிகையின் ஆடிப்பூர
திருவிழா திறப்புற
வாழ்த்துகிறோம்
புங்குடுதீவு-நயினாதீவு
பல நோக்கு
கூட்டுறச் சங்கம்

அம்பிகையின் பாதம்
பணிவோம்
லிங்கம் கூல்பார்
வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்.

நயினை அம்பிகையின்
பெருவிழா
சிறைப்படைவதாக
றேடியோஸ்பதி
766, பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்.

கடல்நடுவே எழுந்தருளி
அருள் ஆட்சி புரியும்
அன்னையே
தமிழ் ஈழ மக்களை
காப்பாற்று அம்மா!
நியூற்ரோன்
எலக்றிக்கல்ஸ்
141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆடிப்பூரத் தினத்தில்
அடியவர்கள் அனைவருக்கும்
அருள் கிடைப்பதாகுக
வேலணை
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகுக் கதைகள் - 2

## புத்தியே சத்தி

குஞ்செலியொன்று பூனையிடம் வசமாக மாட்டிக் கொண்டது.

பூனைக்குப் புழுகம்! அது தனது வழக்கமான விளையாட்டைத் தொடங்கியது.

ஆனல்...... குஞ்செலியோ சாதாரணமானதல்ல. அது மிகவும் புத்திசாலி. துணிவும் மிக்கது.

அந்த ஆபத்து வேளையிலும் அதன் மூளை சுறுசுறுப்பாக வேலைசெய்தது.

'இது கடைசி நேரம். எப்படியாவது இந்தப் பூனையைப் பேய்க்காட்டித் தப்பவேண்டும். தப்புவது மட்டுமல்ல. அதற்குத் தண்ணிகாட்டவும் வேண்டும்.

குஞ்செலி திடீரென்று மாய்மாலம் செய்தது. பூனையை நம்பவைத்தது. அதன் அழுகை. உடல் நடுக்கம் பீதிப் பார்வை...... எல்லாமாகச் சேர்ந்து பூனையின் நெஞ்சில் ஏதோ ஒரு மூலையில் சிறு உடைப்பை - உருக்கத்தை ஏற்படுத்தியது.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு குஞ்செலி மிகவும் மெலிந்த பவ்வியமான குரலிலே, ''மாண்புமிக்க பூனைப் பெரியாரே!'' என்று தொடங்கியது.

''என்னடா. சொல்''

''தாங்கள் என்னைப்போன்றவர்களைப் பிடித்ததும் உடன் சாப்பிடுவதில்லையாமே? ஓடவிட்டு, பிடித்து, ஓடவிட்டு, பிடித்து விளையாடியபின்தான் ...... ஆற அமர உண்டு மகிழ்வீர்களாமே''

பூனைக்குக் குஞ்செலியின் பேச்சுப்பாணி சிரிப்பை வரவழைத்தது. ஆனல் தன் சிரிப்பை மறைத்துக்கொண்டு அதுசொன்னது. ''ஆமாம்! உன்னை அப்படி எல்லாம் செய்யாமல் உடனேயே கொன்று தின்னச் சொல்கிருயா?''

''அது தங்கள் மேலான முடிவைப்பொறுத்தது. ஆனல் எனக்கு ஒரே ஒரு ஆசை. அதை நிறைவேற்றிய பின் தாங்கள் என்னை என்னவும் செய்யலாம்.'' குஞ்செலி அனுங்கியது.

''சரி சொல்', உன் இறுதி ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன்.'' பூனை.

''பெருந்தகையீர்! உங்களைப் போல் அழகான வேறு ஒருவரை என்குறுகிய கால வாழ்க்கையில் நான் கண்டதேயில்லை. உங்கள் பால் வெள்ளை நிறம், பளிச்சிடும் கண்கள், பார்க்கப் பார்க்கப் பசி தீரும் அழகு முகம். இவற்றை அணைத்து முத்தமிட ஆசைப் படுகிறேன்.''

பூனைக்கு உச்சி குளிர்ந்தது. ''சரி! ஒரே ஒரு நிமிஷம் தருகிறேன். செய்து தொலை'' என்றது.

குஞ்செலி 'ஆஹா ஆஹா' என்று ஆரவாரம் செய்தபடி பூனையின் அருகே சென்றது. அணைப்பது போலப் பாவலா காட்டியது.

திடீரென்று... பூனையின் கண்களை நறுக் நறுக்கென்று கடித்தது.

பூனையின் கண்களில் குருதி வழிந்தது. துடிதுடித்தது. மியா மியா என்று கத்தித் தரையிலே புரண்டது.

''அற்பப்பயலே! என் கண்களைக் குருடாக்கி விட்டாயா? உன்னை என்ன செய்கிறேன் பார்.''

பூனை குஞ்செலி மீது பாய்ந்தது. ஆனல் இருட்டோடு முட்டிக் கொண்டதுதான் பயன்!

குஞ்செலி கீச்சிடும் ஒலியை வைத்துக் கொண்டு அதைத் துரத்திப் பிடிக்க அதன் பின்னல் ஓடியது பூனை.

''படுபாவிப் பூனைப்பயலே! என்னோடு விளையாடிய பின்பு எனக்கு யமலோகம் காட்டப் போகிருயோ? இப்பொழுது நீ படும் வேதனையிலும் பல மடங்கு வேதனையோடு உன்னலும் உன் இனத்தாலும் என் இனத்தவர் சித்திரவதையடைந்து உயிர்விட்டதை இப்பொழுதாவது நினைத்துப் பார்.''

சொல்லிக் கொண்டே எலி ஓடியது. பூனை துரத்தியது.

அதைப் போக்குக்காட்டி அங்கும் இங்கும் அலைத்தபின் குப்பைக் கிடங்கொன்றினுள் அதனை வீழவைத்தது குஞ்செலி.

குப்பைக் குழியுள் வீழ்ந்த பூனை மூச்சுத் திணறி இறந்து போயிற்று.

--'சிவராணி'

# உணவு கஷ்டத்தை நீக்க சில ஆக்கபூர்வமான யோசனைகள்

(யாழ்ப்பாணம்)

எமதுமக்கள் மரவெள்ளிஉற்பத்திசெய்வது மிக குறைவு: தற்போது கடும் வரட்சி. ஆகையினுல் மரவெள்ளி பயிரிடலாம். இது பிரயோசனப்படக்கூடிய ஓர் பயிர் ஆகும். உணவு கஷ்டத்தை நீக்க சில ஆக்கபூர்வமான யோசனைகள் என்ற தலைப்பில் தமிழீழ ஆய்வு நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சைவ உணவு உண்போர் தினசரி தமது உணவில் பொன்ஞங்காணி, வல்லாரை, கீரை அகத்தி, தவசி முருங்கை, முருங்கை இலை, கறிவேப்பிலை என்பனவற்றை நன்ருகச் சேர்த்து உண்பதற்கு பழக வேண்டும். மற்றும் மேற்கூறிய இலைவகைகளை உடைய மரஞ்செடிகளையும் ஒவ்வொருவரும் தமது வீட்டுத் தோட்டத்தில் உண்டாக்கிநற்பயனை பெற்று உணவுக் கஷ்டத்தை நீக்கலாம்.

எமது அன்ருட பாவனைக்கு சீனி பாவிப்பதனை தவிர்த்து பனை வெல்லம் பாவிக்கவேண்டும், தினசரி ஒரு லட்சம் பனைகளில் கள் பறிக்கும் தொழிலாளி ஒவ்வொருவரும் ஒரு மரத்தை கள் சீவாது பதநீர் வடித்து அதனைக் காய்ச்சி பனை வெல்லத்தை தமது வீட்டிலேயே தயாரித்துக்கொள்ளலாம். இதன் மூலம் மக்களின் சீனித் தேவையை ஓர் அளவு ஈடுசெய்வதுடன் மக்களுக்கு ஓர் புதிய குடிசைக் கைத்தொழில் ஆகவும் பயன் ஏற்படும்:

சிங்கள மக்கள் தமது உணவில் பலாக்காய், பப்பாசிக்காய், பூசணிக்காய் என்பன சேர்த்து பல வகையான உணவுகளை தயார் செய்வார்கள். எனவே எனவே தமிழ் மக்களாகிய நாமும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய எமது உணவில் பலாக்காய், பூசனிக்காய், பப்பாசிக்காய், ஈரப்பலாக்காய் என்பவற்றில் கறிசமைத்து எமது அன்ருட உணவுத்தேவையை பூர்த்திசெய்யமுடியும்.

எமது மக்கள் மரவள்ளி உற்பத்தி செம்வது மிகக் குறைவு. தற்போது கடும் வரட்சி ஆகையினுல் மரவள்ளி பயிரிடலாம். இதன் கிழங்கு அவித்து, பொரித்து, கறி சமைத்து சாப்பிடலாம்: மரவள்ளி நுனிக் குருத்து இலைகளை துவைத்து (இடித்து) சாப்பாட்டு உணவாகவும் சாப்பிடலாம். இப்படியான சில பழக்கம் எம் மக்கள் சிலரிடம் தான் காணப்படுகிறது. இப் பழக்கத்தை எம் மக்கள் அனைவரும் செயல்படுத்த வேண்டும்.

வீட்டில் எல்லோரும் வாழை மரம் நாட்டி வாழைமரத்திலிருந்து பழம், காய். பொத்தி, தண்டு, இலை, வடகம் போன்ற பல உணவுப் பொருட்களைப் பெற்று எமது அன்ருடத் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம்.

## நிவாரணம் கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

1987-ம்ஆண்டு நடந்த வன்செயலில் கணவனை இழந்த கைம்பெண்கள் சிலருக்கு இதுவரை நிவாரணம் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

நல்லூர் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாய் ஒருவர் கணவனை இழந்ததையடுத்து நிவாரணத்திற்கு விண்ணப்பித்து அதற்குத் தேவையான அத்தாட்சிகளையும் சமர்ப்பித்தும் இதுவரை நிவாரணம் கிடைக்கவில்லையெனக் கூறப்படுகிறது.

# இராணுவத்தில்சேர

## முஸ்லிம் இளைஞர்கள் ஆர்வம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் சேர்வதற்கு முஸ்லிம் இளைஞர்கள் முண்டியடித்து நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நிரந்தர தொண்டர் படைகளுக்கு ஆள்திரட்டுவதற்கான நேர்முகப்பரீட்சை கொழும்பில் இடம்பெற்றபோது, திரண்டிருந்த இளைஞர்களில், பெருந்தொகையான முஸ்லிம் இளைஞர்கள் முண்டியடித்துக்கொண்டு நின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது: (அ)

# சாவகச்சேரி நகரில்

## அகதிகள் தகவல் நிலையம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி அகதிகள் நிவாரணக்கழகத்தின் ஆதரவில் சாவகச்சேரியில் அகதிகள் தகவல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் வெளிமாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி பகுதிக்கு வரும் அகதிகளை தங்குவதற்கான முகாம்கள் ஏற்படுத்திக் கொடுக்கவும் முகாம்களுக்கு வழிகாட்டவும் உதவியாக 24 மணிநேரமும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை வெளிமாவட்ட அகதிகளின் வசதி கருதி மட்டுவில் மகா வித்தியாலயத்தில் இவர்களுக்கான அகதி முகாம் ஒன்றினை அமைப்பதற்கும் மேற்படி கழகம் தீர்மானித்துள்ளது.

# அகதிகளை ஆளுநர்

## சந்தித்து ஆறுதல் கூறினர்

(சென்னை)

இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் வந்து குவிந்துள்ள ஆயிரக்கணக்கான அகதிகளை தமிழ்நாடு ஆளுநர் திரு. பர்ஞ்லா நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

அகதிகள் மறுவாழ்வுதுறை இயக்குநர் திருமதி ஹரியாணி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செல்லமுத்து ஆகியோரும் ஆளுநருடன் அகதி முகாமுக்குச் சென்று அகதிகள் நலன் குறித்து விசாரித்தனர்.

இவர்களைச் சந்திக்கும் முன்ணர் ஆளுனர் பர்ஞ்லா இராமேஸ்வரம் ஆலயத்துக்கும் அங்குள்ள குருத்துவாராவுக்கும சென்று வழிபட்டார். (அ)

காட்டு வழியாக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாமிற்கு வருமாறு படையினர் வேண்டுகோள் விடுத்ததைதொடர்ந்து இவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து இரவிரவாக புறப்பட்டு வந்துள்ளனர். இவர்கள் திருமலையில் சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்த மக்களாகும்.

தேடுதல் வேட்டையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறியப்படுகிறது.

மகாஓயாவில் கொஸ்வெல கிராமப்பகுதியில் அரசபடையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

கிரானிலும் அரசபடையினர் நான்கு தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அன்னை நாகபூஷணியை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''சுந்தரியெந்தை
துணைவியென் பாசத்
தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி
ஞண் மகிடன் றலை மேல்
அந்தரி நீலி யழியாத
கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தவத் தாண்
மலர்த் தாளென்
கருத்தனவே''

''எம் பிராட்டி திருவருள் எல்லோர்க்கும் இனிதே கிடைப்பதாக''.

சுபம்

# இந்தியாவின்ஷெல்

## கிணற்றிலிருந்து மீட்பு!

(மட்டுவில்)

கல்வயலில் கிணறு ஒன்று துப்பரவு செய்து இறைத்த பொழுது, அதனுள் 'ஷெல்' ஒன்று கிடக்கக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

கல்வயலைச்சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியம் என்பவரின் கிணற்றினுள்ளேயே சுமார் ஒரு அடிக்கும் அதிக நீளமான இந்த 'ஷெல்' விழுந்து கிடந்தது.

இந்த 'ஷெல்' இந்திய அமைதிப் படைக்குச் சொந்தமான 'ஷெல்' என்று கூறப்படுகிறது. (82)

## ஹெலிதாக்கி ருன்ஸ் போமர் சேதம்!

(நாவற்குழி)

ஆனையிறவுப் பகுதியில் கடந்த 21ம் திகதி ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலினுல் ஆனையிறவிற்கு அருகாமையில் உள்ள ருன்ஸ் போமர் சேதமடைந்துள்ளது. (107)

## மாணவ மன்றப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரி உயர் வணிகமாணவ மன்றப்பொதுக்கூட்டம் நாளை 26ம் தேதி வியாழன் காலை 10 மணிக்கு தொழில் நுட்பக் கல்லூரி ரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## ஹெலி மூலம் உணவுப் பொதி

(நாவற்குழி)

மாங்குளம் இராணுவ முகாமிற்கு கடந்த 22-ம் திகதி ஹெலிகொப்டரிலிருந்து 30 உணவுப் பொதிகள் போடப்பட்டன. (107)

வல்லைவெளியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தற்போது மினிபஸ்கள் மட்டுமே யாழ்-பருத்தித்துறைப் போக்குவரத்துச் சேவையிலீடுபட்டு வருகின்றன. திடீரென்று வானில் வட்டமிடும் ஹெலிகள் வல்லைவெளியால் செல்லும் போக்குவரத்து வாகனங்களைத் துரத்தி வேட்டுக்களைத்தீர்த்து வருகின்றன.

இதனுல் வல்லைவெளியால் போக்குவரத்துச் செய்வோர் அடிக்கடி ஹெலி வேட்டுக்களினுல் காயமுற்று வருகின்றனர். (54)

கண்ணிவெடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் அகப்பட்டு ஒரு பக்கம் சேதமாக்கப்பட்ட நிலையில் முகாம் நோக்கி கொண்டு செல்லப்பட்டது. (107)

பிரபாகரனுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''செல்லக்கிளி ஒரு சிறந்த போராட்டத் தலைவன் மட்டுமல்ல மிகத் திறமை வாய்ந்த ஒரு மதிநுட்பமான போராளியுமாவார், எதிரிப்படையினர் பல தடவைகள் செல்லக்கிளியிடம் ஏமாந்ததுண்டு.''

நல்லூர் வட்ட அவைச் செயலாளர் திரு. புவேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் க. செல்வநாயகம், எஸ். ஆஞ்சநேயர், ரங்கன் உட்படப் பலர் உரையாற்றினுர்கள்.

செல்லக்கிளியின் உருவப் படத்தை விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் திரு. பேபி சுப்பிரமணியம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

காயமடைந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும், உடைமாற்றவும், உணவு அருந்தவும், எழுந்து நடமாடவும் உதவி செய்துவருவதாகவும் அவர் கூறினுர்.

காயமடைந்தவர்களின் தொகை தினமும் அதிகரித்து வருவதால் அவர்களை இரவில் பராமரிக்க விரும்பும் யாழ். ஆரியகுளம் புதிய உயர்கல்லூரிமாணவர்களையும், பழைய மாணவர்களையும்உடனடியாக தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org